ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

11.12.2025

1. சற்குருவாய் கலியினில் உலகினில்
சகலரும் என் பதம் பற்றிட
அற்புதம் நிகழ்த்துவேன் அரங்கனும்
ஆறுமுகா அரங்கா என அழைத்து

2. அழைத்து அனுதினமும் பூஜிப்பவர்க்கு
அரங்கனென் அனுகூலம் உண்டு
காலமதில் விசுவாவசு தேள் திங்கள்
கடை குருவார அருளாசி தன்னை

3. ஆசி தன்னை அரங்கனும் உரைப்பேன்
ஆறுமுகனார் சூட்சும சோதியில்
ஆசி தந்து அரங்கன் யான் காட்சிதர
அனைவரும் பிரணவக் குடில் அணுகி

4. அணுகியே என் ஜீவ தடத்தில்
அமர்ந்து தவ தியானம் செய்து
ஞானம் வேண்டி நன்மை வேண்டி
நல்சீடன் ராம்குமார் கரம்பட

5. கரம்பட தீட்சைதனை ஏற்க
கண்டுரைப்பேன் ஆற்றலாக இறங்கி
வரம் பலவும் சகல வளமும் தருவேன்
வாழும் காலமே வள்ளல் தன்மை பெற

6. பெறவே பிரணவக் குடிலில்
பெருமளவில் அன்னதானம் வழி
கூறவே பொருளுதவிதனை செய்து
குறைகளில்லா வளமும் நலமும் தாஎன

7. என வேண்டி சரணாகதி கொண்டு
என் சீடர் பெருமக்கள் ஆகவே
ஞானபூசை அன்னதான சேவையில்
நம்பகமுற செயல்பாடு காண

8. காணவே கந்த வேலனுடன் யானும்
கருணை கொண்டு அருள்புரிய
ஞானவான்களாக மாற்றம் பலவும்
ஞானிகள் துணையும் பெருகக் கண்டு

9. கண்டுமே உலகியல் இடர்களை
கடந்து வாழ்விலும் வெற்றிபல
உண்டாகி அமைதி பாதுகாப்பும்
ஊழையும் வென்று பெரும்பேறு

10. பெரும்பேறு ஈதூழே அடைவர்
பேதமிலா ஞானத் தெளிவும்
அருந்தவசிகள் வழியில் தவசியாக
அனைத்திலும் தேறி நிற்பர்

11. நிற்கவே ஞானவான்கள் படைக்கும்
நல்சபை பிரணவக் குடில்தனில்
அற்புதம் நாளும் நடக்கும் எனக் கூறி
அரங்கன் யான் அருளிய குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி